1987 ஏப்ரல் 20]

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கன்னியாகுமரி விவேகானந்தா ஆலயத்திற்கு பப்ளிக் கார் வசதி செய்து கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்ற கேள்விக்கு அதற்கு உத்தேசம் இல்லையென்று இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை கன்னியாகுமரியில் மாலை நேரத்தில் கிழக்குப் புறத்திலிருந்து எழுகின்ற நிலவின் பாதியையும், மேற்கு புறத்தில் விழுகின்ற நிலவின் பாதியையும் காண்கின்ற அற்புதக் காட்சி இருந்து வந்தது. அந்த அற்புதக் காட்சியை காண உலகத்திலிருந் தெல்லாம் பயணிகள் வந்துகொண்டிருந்தார்கள். இப்போது அந்த அற்புத காட்சிகள் தெரியாதவாறு அங்கே கட்டடங்கள் அவற்றை மறைத்துக்கொண்டு இருப்பது அரசுக்குத் தெரியுமா? அப்படி என்றால் அதனை மாற்றியமைக்கின்ற உத்தேசம் அரசிடம் உண்டா?

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் இதுவரை கிடைக்க வில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களாவது அதுபற்றி அரசுக்கு தெரிவித்திருந்தால் சரியாக இருந்திருக்கும். இப்பொழுது கூட எந்தக் கட்டடம் என்று எனக்குப் புரியவில்லை. அது முறையாக இருந்தால் அதைப்பற்றி ஆய்ந்து நடவடிக்கை எடுக்கலாம்.

பட்டுக்கோட்டை தொகுதி, ஆலம்பள்ளம்-முசிரி சாலையில் பாட்டுவனாச்சி ஆற்றில் பாலம்.

411—(* வினா எண் 10109) திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள ஆலம்பள்ளம்-முசிரி சாலையில் பாட்டுவனாச்சி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்டுக்கோட்டை தொகுதியில் உள்ள ஆலம்பள்ளம்—முசிரி சாலையில் இடையில் செல்கின்ற பாட்டுவனாச்சி என்ற காட்டாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கான ஒரு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தார்கள். ஆனால் அமைச்சரவர்கள் அரசுக்குத் தகவல் இல்லை என்று சொன்னார்கள். முசிரி என்கின்ற அந்தத் திருத்தலம், தஞ்சையை ஆண்ட முசுகுந்த மாமன்னனுக்குத் தொழுநோய் ஏற்பட்டபொழுது, அந்தத் திருத்தலத்திற்கு வந்த பொழுது, அவருடைய நாய் அங்குள்ள குட்டைக்குச் சென்று குளித்தபொழுது அந்த நாய்க்கு இருந்த தொழுநோய் அகன்றதாகவும், பிறகு மாமன்னனும் அங்கே குளத்தை வெட்டி, கோயிலையும் விரிவுபடுத்திக் கட்டி, அந்தத் திருத்தலத்தில் உள்ள குளத்தில் குளித்ததால் அவனுக்கும் குஷ்டம்—தொழுநோய் அகன்றதாகவும், இப்பொழுதும் அந்தத் திருத்தலத்தில் சென்று குளிப்பவர்களுக்கெல்லாம் சரும நோய்கள் நீங்கி வருகின்றன. எனவே, அந்தத் திருத்தலத்தின் முக்கியத்துவத்தைக் கருதி, எனது தொகுதிக்குத் தெற்கே இருக்கின்ற ஐம்பது கிராமங்களிலுள்ள மக்கள் அந்த ஊருக்கு வருவதற்கு சிரமப்படுகிறார்கள், ஆகவே, அந்தப் பாலத்தை உடனடியாகக் கட்டித் தர-தமிழக அரசு—அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, தகவல் இல்லை என்று நான் சொல்லவில்லை. இதைக் கட்டுவதற்கான உத்தேசமில்லை என்றுதான் நான் சொன்னேன். அதற்கு 27 இலட்சம் ரூபாய் ஆகுமென்று கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்தினுடைய நிதிநிலைமைதான் இதற்குக் குறுக்கே நிற்கிறது. நிதிநிலைமை சரியாகிறபோது செய்யப்படும். இன்னொன்றைச் சொன்னார்கள். அங்கே போகின்றவர்கள் அங்கே குளித்தால் தொழுநோயெல்லாம் சரியாகிவிடுகிறது என்று

1987 ஏப்ரல் 20]

சொன்னார்கள். சில சிரமங்களை ஏற்றுக்கொண்டு நடந்து போகின்றபொழுது—இதுபோன்ற ஆறுகளையெல்லாம் கடந்து போகின்றபொழுதுதான் அதுபோன்ற நன்மைகளே விளைகின்ற நிலைமை இருக்கிறது. எனவே, அந்தப் பாலத்தைக் கட்ட வேண்டுமா என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் மீண்டும் ஒருமுறை நன்றாக யோசித்து, ஒருவேளை இந்தப் பாலத்தைக் கட்டுவதன் மூலமாக அதிலே இருக்கின்ற புனிதத் தன்மை போய் விட்டால் சரியாக இருக்காது. அதைப்பற்றி யோசித்து, அதற்குப் பிறகு சொன்னால் கூடச் சரியாகயிருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களின் பதிலுக்கு மிகுந்த நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். அதேபோல், அவசியம் கட்டியாக வேண்டும். நன்கு யோசித்துச் சொல்கிறேன். கோடை காலங்களில் செல்வதற்குச் சிரமமில்லை. ஆனால் மழைக் காலத்தில் 50 மீட்டர் காட்டாற்று வாய்க்காலைக் கடப்பது என்பது—6 அடி, 7 அடி தண்ணீரில்—கிராம மக்களுக்குச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, அருள்கூர்ந்து பரிசீலித்துக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, பரிசீலிக்கலாம்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரூர் தொகுதி, மதுக்கரை நகரியப் பகுதியில் தொழிற்பேட்டை துவங்குதல்.

412—(* வினா எண் 11721) திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி மதுக்கரை நகரியக்குழு பகுதியில் தொழிற்பேட்டை துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொழில் கூடங்கள் கட்டப் படுகின்றன.

(இ) எப்போது துவங்கப்படும்?